மங்கையர், ஆடவர்
மனதைக் கொள்ளை
கொள்ளும்
வண்ண வண்ணப்பட்டு,
பருத்தி புடைவைக் கடல்
சீமாட்டி
ஜவுளி சமுத்திரம்
122, மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.

பக்கங்கள் நான்கு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 5-00

கல்யாண முகூர்த்தப்
புடைவைகளின்
கைராசியான ஸ்தாபனம்
சீமாட்டி
ஜவுளி சமுத்திரம்
122, மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.

சுடர்: 9 திருவள்ளுவர் ஆண்டு 2025 தை 30 சனிக்கிழமை (12 – 02 – 1994) UTHAYAN A Lively National Tamil Daily கதிர் 77

## யுத்தத்தை நிறுத்தி, பொருளாதாரத் தடையை நீக்கி.................
# சமாதான சூழ்நிலையை அரசு உருவாக்கினால்
# பேச்சுவார்த்தை நடத்துவதற்குப் புலிகள் தயார்

## யாழ். வந்த நல்லெண்ணக் குழுக்களிடம் அரசியல் ஆலோசகர் தெளிவு படுத்தினார்



யாழ்ப்பாணம், பெப்ரவரி 12

சமாதானப் பேச்சுக்களை நடத்துவதற்கு சமாதானச் சூழ்நிலை அவசியம் அத்தகைய சூழ்நிலையை உருவாக்குவதற்கு போர் நிறுத்தமும், பொருளாதாரத் தடை நீக்கமும் பிரதானம்.

அவற்றை அரசு செய்யுமானால், பேச்சுவார்த்தை நடத்துவதற்கு விடுதலைப் புலிகள் தயார்.

இதனை யாழ்ப்பாணம் வந்து எங்களுடன் பேசிய நல்லெண்ணத் தூதுக் குழுக்களிடம் எடுத்துக் கூறினோம். சமாதான சூழ்நிலையை உருவாக்குவதற்கு உதவுமாறு அவர்களிடம் வலியுறுத்தினோம்.

இத் தகவல்களை தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகர் திரு. அன்ரன் பாலசிங்கம் நேற்றிரவு நடத்திய செய்தியாளர் மாநாட்டில் தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்துக்கு தெற்கிலிருந்து மூன்று நல்லெண்ணத் தூதுக்குழுக்கள் வந்தன. அவற்றுடன் நடத்திய பேச்சுவார்த்தைகள் குறித்து நிலைமையைத் தெளிவுபடுத்துமுகமாக திரு பாலசிங்கம் பிரஸ்தாப செய்தியாளர் மாநாட்டை நடத்தினார்.

அரசியல் ஆலோசகர் செய்தியாளர் மாநாட்டில் தெரிவித்ததாவது:-

சமாதானக் குழுக்கள் யாழ்ப்பாணத்துக்கு வந்து போகின்றன.

கடந்த சில நாட்களில் மூன்று கிறிஸ்தவக் குழுக்கள் இங்கு வந்தன. கத்தோலிக்க அதிமேற்றிராணியார் தலைமையில் ஒரு குழு, அங்கிலிக்கன் திருச்சபை ஆயர் கெனத் பெர்னாண்டோ தலைமையான குழு அடுத்தது மெதடிஸ்த சபைக் குழு.

அவர்களிடம் எமது நிலைப்பாட்டை மிகத் தெளிவாக எடுத்துக் கூறியுள்ளோம்.

★ சமாதானப் பேச்சுக்களை ஆரம்பிப்பதற்கு சமாதான சூழ்நிலை ஏற்பட வேண்டும். சமாதான சூழ்நிலைக்கு போர் நிறுத்தமும், பொருளாதாரத் தடை நீக்கமும் அவசியம்.

★ போர் நிறுத்தமும், பொருளாதாரத் தடை நீக்கமும் சேர்ந்து ஒரு சகஜமான, சுமுகமான நிலையை தோற்றுவித்தால் மட்டுமே விடுதலைப் புலிகள் பேச்சுவார்த்தைக்கு வருவார்கள்.

## நிபந்தனைகள் அல்ல; கோரிக்கைகளே

★ ஆனால் விடுதலைப் புலிகள் பேச்சுவார்த்தைக்கு முன் நிபந்தனை எதுவும் விதிக்கவில்லை. நாம் கேட்பவை இரண்டும் கோரிக்கைகளே யாகும்.

எங்களது இக்கோரிக்கைகளை சிங்கள அரசாங்கம் முன் நிபந்தனையாகப் பார்க்கக் கூடாது.

இந்த விடயங்களை தான் நாம் கிறிஸ்தவ சமாதானக் குழுக்களிடம் வலியுறுத்தி கூறினோம்.

அடுத்த முக்கிய விடயமென்னவென்றால் —

போர் நடந்து கொண்டிருக்கும் போது, மக்கள் சாவையும், அழிவையும் சதா சந்தித்துக் கொண்டிருக்கும் போது, பேச்சுக்கள் நடத்துவது நடைமுறைச் சாத்தியமல்ல.

ஆகவே அரசாங்கம் முதல் படியாக செய்ய வேண்டியது என்னவென்றால், போரை நிறுத்துவதற்கான நடவடிக்கைகளை எடுக்கவேண்டும். விடுதலைப் புலிகள் போர் நிறுத்தத்துக்கு தயார்.

அடுத்த கட்டமாக மக்களுக்கு பெரும் சுமையாக இருக்கும் பொருளாதாரத் தடையை நீக்கி சகஜநிலையை தோற்றுவிக்கவேண்டும்.

இந்த கோரிக்கைகளை நாம் விடுப்பது ஏனென்றால் இராணுவ, பொருளாதார ரீதியான அழுத்தங்களின் மத்தியில் பேச்சுவார்த்தைகளை நடத்துவது தமிழ் மக்களுக்கு சாதகமாக இருக்காது.

## அழுத்தங்களின் மத்தியில் பேச முடியாது

இராணுவ, பொருளாதார அழுத்தங்களின் மத்தியில் பேச்சுவார்த்தை நடத்துவது தமிழ்மக்களுக்கு சாதகமாக இருக்காது என்பது மட்டுமன்றி அது சுதந்திரமாகவும் இருக்காது.

ஆகவே அரசாங்கம் தமிழ் மக்களுக்கு இப்படியான நல்லெண்ணத்தை முதற்படியாகச் செய்து காட்டவேண்டும் நல்ல சமிக்ஞையை காட்ட வேண்டும். தமிழ் மக்களுக்கு நம்பிக்கையை ஏற்படுத்த வேண்டும்.

## யாழ்ப்பாணத்திலேயே முதலில் பேசலாம்

அப்படியான ஆரம்ப நடவடிக்கைகள் எடுக்கப்படுமானால் — சமாதானச் சூழ்நிலை உருவானால் — விடுதலைப் புலிகள் பேச்சுவார்த்தைக்கு தயார்.

ஆரம்ப பேச்சுக்களை யாழ்ப்பாணத்தில் நடத்தலாம் என்று நாம் சொல்கிறோம். இந்த சூழ்நிலை ஏற்பட்டால் யாழ்ப்பாணத்தில் பேச்சுவார்த்தைகளை ஆரம்பிக்கலாம்.

தெட்டத் தெளிவாக நிலைப்பாட்டை தெரிவித்துள்ளோம்.

சமாதானச் சூழ்நிலையை உருவாக்குவதற்கு அரசுடன் பேசி உருப்படியாக எதையும் செய்யுமாறு அக்குழுக்களிடம் தெரிவித்துள்ளோம்.

## தூதுக்குழுக்கள் தீர்வுடன் வரவில்லை

மற்றும்படி இந்த நல்லெண்ணத் தூதுக்குழுக்கள் எந்தத் தீர்வையும் கொண்டுவரவில்லை. நாமும் எந்தத் தீர்வுத் திட்டத்தையும் கொடுக்கவும் இல்லை.

ஆரம்பப் படிமுறைகளைச் செய்யுமாறு கிறிஸ்தவக் குழுக்களிடம் கேட்டுள்ளோம்.

இனப்பிரச்சினை தீர்வுக்கான பேச்சுவார்த்தைகள் ஸ்ரீலங்கா அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையிலேயே நடக்க வேண்டும்.

சமாதானக் குழுக்களின் பங்கு என்னவென்றால், சமாதான தீர்வுக்கான பேச்சு நடத்துவதற்கான சமாதான சூழ்நிலையை ஏற்படுத்துவதே ஆகும். அரசுக்கும், விடுதலைப் புலிகளுக்கும் இடையில் தான் பேச்சு நடக்க வேண்டும்.

அரசினர் தான் முன்பு விதித்த நியந்தனைகளை நீக்குவதாகக் கூறுகிறார்கள் ஆயுதத்தை போடத் தேவையில்லை என்று கூறுகிறார்கள். அது அரசின் பிரச்சினை.

போர் நிறுத்தம், பொருளாதாரத்தடை நீக்கம் என்பன பேச்சுவார்த்தைக்கு அவசியம் என்பதே எமது நிலைப்பாடு.

சமாதானக் குழுக்களிடம் இதைத்தான் நாம் வலியுறுத்திக் கூறியுள்ளோம். எமது நிலைப்பாட்டை இந்தக்குழுக்களிடம் தெரிவித்துள்ளோம். அவர்கள் அரசுடன் பேசி மீண்டும் வந்து எம்முடன் பேசலாம்

## இங்கிருந்து தெற்கே இந்துமதக்குழு

யாழ்ப்பாணத்தில் இருந்து இந்து மத குருமார் குழு ஒன்று நல்லெண்ண முயற்சியாக கொழும்பு செல்லவிருக்கிறது. ஜனாதிபதி உட்பட மற்றும் தலைவர்களுடனும், சிங்கள மக்களுடனும் அவர்கள் பேச முயற்சி எடுக்கிறார்கள்— என்றார்.

ஜனாதிபதி டி. பி. விஜேதுங்காவின் பேச்சுக்கள் குறித்து கருத்து தெரிவித்த திரு. அன்ரன் பாலசிங்கம் —

இப்படியான காரசாரமான அறிக்கைகள் விடுவது சமாதானத்துக்கான சூழ்நிலையை ஏற்படுத்தாது.

பிரதமர் ரணில் சமாதானம் பேசுகிறார். ஜனாதிபதி அதற்கு எதிராகக் கருத்து தெரிவிக்கிறார். முதலில் அவர்களுக்குள் தெளிவான நிலை ஏற்பட வேண்டும்.

சமாதானக் குழுக்கு எம்மது... இதுவரை அரசிடம் இருந்து உத்தியோக பூர்வமான அறிவிப்பு வரவில்லை. முதலில் சமாதானச் சூழ்நிலையை ஏற்படுத்த வேண்டும். அதன் பின் யாழ்ப்பாணம் வந்து எம்முடன் பேசலாம் என்றார்.

யாழ்ப்பாணம் வந்த கத்தோலிக்க அதிமேற்றிராணியாரிடம் தமிழீழக் கோரிக்கையை கைவிடுவதாக நாம் தெரிவிக்கவில்லை.

அரசு உருப்படியான தீர்வு எதையும் தந்தால் அதை பரிசீலனை செய்வதாக கூறினேன்.

எங்களது இலட்சியம் தமிழீழம். தமிழீழ தேசிய சுயநிர்ணய உரிமைக்காக நாம் போராடுகின்றோம்.

அரசு உருப்படியான தீர்வு ஒன்றை முன்வைக்காமல் பின்னடித்துக் கொண்டிருந்...

(4 ஆம் பக்கம் பார்க்க)

## படகுச்சேவை

யாழ்ப்பாணம், பெப். 12

கிளாலி – பூநகரி படகுச் சேவை வழமையான நேரத்தில் இன்று நடைபெறும் என விடுதலைப் புலிகளின் அரசியல் துறையினர் அறிவித்துள்ளனர். (இ-3)

## சுதந்திரக்கட்சி கண்டித்து அறிக்கை

ஜனாதிபதியை நாடாளுமன்றமே தெரிவு செய்யும் விதத்தில் அரசமைப்பில் திருத்தம் கொண்டுவரப் போவதாக ஐக்கிய தேசியக் கட்சி தெரிவித்திருப்பதை ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி கண்டித்து நேற்று அறிக்கை வெளியிட்டது.

தற்போதைய முறைப்படி ஜனாதிபதித் தேர்தல் நடந்தால் அதில் வெற்றி பெற முடியாது என்பதாலேயே ஜனாதிபதி விஜேதுங்க அரசமைப்பை திருத்தி ஜனாதிபதி தெரிவு முறையை மாற்ற முயலுகிறார் என்றும் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டது.

## நரோமாவில் 80 பயணிகள்

வடமராட்சி, பெப். 12

திருகோணமலையில் இருந்து ''நரோமா'' கப்பல் மூலம் காங்கேசன் துறைக்கு நேற்றுக் காலை வந்து சேர்ந்த 80பயணிகள் ''வாதுவ'' கப்பலில் பருத்தித்துறையை வந்தடைந்தனர்.

பல்கலைக்கழக மாணவர்களும், அரச ஊழியர்களும் இக்கப்பலில் வந்ததாகவும் — நேற்றுக் காலை காங்கேசன் துறையில் வைத்து படையினர் இவர்களை சோதனை செய்ததாகவும் - நேற்று பருத்தித்துறைக்கு வந்து சேர்ந்த பயணிகள் தெரிவித்தனர்.

பருத்தித்துறையில் இருந்தும் ஒரு தொகுதி பயணிகள் காங்கேசன் துறைக்கு நேற்று சென்றனர். (இ-3-173)

## இறந்தோரில் கோயில் குருக்களும் ஒருவர்

கொழும்பு, ஒறுகொடவத்த ரயில் கடவையில் கடந்த புதனன்று இடம் பெற்ற ரயில் —பஸ் விபத்தில் உயிரிழந்த நால்வரில் திரு. ப. கணேசராஜக் குருக்களும் (வயது 45) ஒருவர் என அடையாளங் காணப்பட்டுள்ளது.

இவர் புங்குடுதீவு 10 ஆம் வட்டாரம் கண்ணகி அம்மன் கோவில் பிரதம குரு ஆவார்.

ரயிலுடன் மோதி விபத்துக்குள்ளான பஸ்ஸில் காயமடைந்தவர்களில், சில தமிழர்களும் அடங்கியுள்ளனர் என்று தெரியவருகிறது. (இ-5)

## மதத் தலைவர்கள் நேற்று புலிகளைச் சந்தித்தனர்

யாழ்ப்பாணம் வந்துள்ள அங்கிலிக்கன் திருச்சபை ஆயர் அதி. வண. கெனத் பெர்னாண்டோவுக்கும், விடுதலைப் புலிகள் பிரதிநிதிகளுக்கும் இடையில் நேற்று மாலை பேச்சுக்கள் இடம்பெற்றன.

இப்பேச்சுக்களில் 'அங்கிலிக்கன் ஆயருடன் மெதடிஸ்த திருச்சபைத் தலைவர் அருட் கலாநிதி: இங்ஸ்லி முத்தையாவும் பங்குபற்றினார்.

விடுதலைப் புலிகள் சார்பில் அரசியல் ஆலோசகர் கலாநிதி அன்ரன் பாலசிங்கம், விடுதலைப் புலிகள் பிரமுகர்கள் திரு. வெ. இளங்குமரன், திரு. வே. பாலகுமார், திரு. கரிகாலன் ஆகியோர் பங்குபற்றினர். (இ-3-3)

## மேலும் 500 அகதிகள் திங்களன்று வருவர்
### இன்னும் 70,000 பேரே உள்ளனராம்

சென்னை, பெப். 12

இலங்கைத் தமிழ் அகதிகளில் ஐந்நூறுபேர் எதிர்வரும் திங்கட்கிழமை இராமேஸ்வரத்திலிருந்து கப்பல் மூலம் இலங்கைக்கு அனுப்பிவைக்கப் படுவார்கள்.

தமிழ்நாடு மாநில வருவாய்த்துறை சிறப்பு ஆணையாளர் திரு கி எம். இராம்தாஸ் திருச்சியில் செய்தியாளர்களிடம் முன்கண்டவாறு தெரிவித்தார்.

இலங்கைக்குத் திரும்பிச் செல்ல விருப்பம் தெரிவித்தவர்களின் பேரில் இவர்கள் திருப்பி அனுப்பி வைக்கப்படுவதாகவும் —

இதுவரை 40 ஆயிரம் பேர் அனுப்பி வைக்கப்பட்டிருப்பதாகவும்:—

இன்னும் 70 ஆயிரம் பேர் தமிழகத்தில் தங்கியிருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

## கோமாரி அடுத்த வாரம் பருத்தித்துறை வருகிறது
### 'ருகுணு' நாளை மறுதினம்

கொழும்புத்துறை முகத்தில் தற்சமயம் பொருள்கள் ஏற்றிக்கொண்டிருக்கும் கோமாரி கப்பல் எதிர்வரும் 19 ஆம் திகதியளவில் பருத்தித்துறைக்கு வந்து சேரும் என தெரிவிக்கப்பட்டது.

இக்கப்பலில் ஆயிரத்து 500 மெற்றிக் தொன் மா, 500 மெற்றிக் தொன் அரிசி, 700 மெற்றிச் தொன் சீனி, 100 மெற்றிக் தொன் ரவை, 50 மெற்றிக் தொன் பால்மா ஆகியன எடுத்து வரப்படவிருக்கிறன என தெரிவிக்கப் பட்டுள்ளது.

அதேசமயம் உரம் மற்றும் செயலக திருத்தவேலைகளுக்கு தேவையான கட்டடப் பொருள்களுடன் 'ருகுணு' கப்பல் நாளை மறுதினம் பருத்தித்துறைக்கு வந்து சேரும் என எதிர்பார்க்கப்படுகிறது. [இ-3]

## மல்லாகம் பகுதியில் ஷெல் மூவர் காயம், வீடுகள் சேதம்

யாழ்ப்பாணம், பெப் 12

பலாலி இராணுவ முகாமில் இருந்து ஏவப்பட்ட இரண்டு ஷெல்கள் மல்லாகம் கோட்டைக்காடு குடியிருப்புப் பகுதியில் விழுந்து வெடித்ததில் மூவர் காயமடைந்தனர். மூன்று வீடுகள் சேதமடைந்தன.

இச்சம்பவம் நேற்றுக் காலை 10 30 மணி அளவில் இடம் பெற்றது

சம்பவத்தில் அளவெட்டியில் இருந்து இடம்பெயர்ந்து கோட்டைக்காட்டில் வசிக்கும் மகேந்திரம் மதி ன் (வயது ஒன்றரை) சிவராசா பேரின்பநாயகி (வயது 45) மற்றும் இவர்களது உறவினர் கதிசிப்பிள்ளை சுதாகரன் (வயது 29) ஆகிய மூவருமே காயமடைந்தவர்களாவர்.

காயமடைந்தவர்கள் யாழ். போதனா வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

பலாலி இராணுவ முகாமில்

(4 ஆம் பக்கம் பார்க்க)

## பூநகரி தாக்குதல் மாதிரி அமைப்பு முல்லைத்தீவில்
### நேற்று முன்தினம் திறந்து வைப்பு

யாழ்ப்பாணம், பெப் 12

பூநகரி ராணுவம் கூட்டுப் படைத் தளம் மீதான தாக்குதல் தவளை தொடர்பான மாதிரி அமைப்பு முல்லைத்தீவு மாவட்டத்தில் கடந்த வியாழக்கிழமை திறந்து வைக்கப்பட்டது

'தவளை' தாக்குதலின் 90 ஆம் நாள் வெற்றி விழாவைக் குறிக்கும் முகமாக இம் மாதிரி அமைப்பு திறந்து வைக்கப் பட்டது

முல்லை. மாவட்ட மகளிர் அமைப்புப் பொறுப்பாளர் செல்வி மயூரி இம்மாதிரி அமைப்பினை திறந்து வைத்தார் முல்லை. மாவட்ட துணைப் படை வீரர்களின் பாண்ட் வாத்திய இசையுடனும், அணிவகுப்புகளுடனும்

(4 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

கோழிக்குஞ்சுகள் உடன் விநியோகம், லோமன் சேவல் குஞ்சுகள் விற்பனைக்கு உண்டு. சாம் வெளிலி, சிங்கம் வீதி, உடுவில். (உடுவில் மகளிர் கல்லூரிக்கு முன் ஞானப்பிரகாசா வீதியூடாக) (6798)

இரண்டு போத்தல் பால் எடுக்கக்கூடிய யமுனாபாறி ஆடும், அதன் இருபது நாட்கள் நிரம்பிய இரண்டு கடாக் குட்டிகளும், சணக் கலப்பு பால் ஆடுகளும் விற்பனைக்கு உண்டு. கணேசிங்கம், இல: 214, பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம். (29391)

வான்கோழிகள். Fantail, கறணம் புறாக்கள் விற்பனைக்குண்டு. நல்லூர் வீடியோ சென்ரர், இல. 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர். (29373)

அடை வைக்கக்கூடிய நல்ல இன கோழி முட்டைகளும், பன்டம் கோழி முட்டைகளும் எப்பொழுதும் பெற்றுக் கொள்ளலாம். நல்லூர் வீடியோ சென்ரர், இல. 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர். (29372)

பொமனேரியன் நாய் (பிறவுன் 1½ வயது, ஆண்) அத்துடன் வெள்ளை, பிறவுன் குட்டிகள் (பூச்சி நீக்கியது) விற்பனைக்குண்டு. மற்றும் இறை இரக்கப் பத்தி ஜெபப் புத்தகங்களும் உண்டு. தொடர்பு: 392, பிரதான வீதி (செபஸ்தியன் சந்தி), யாழ்ப்பாணம். (29348)

முட்டையிடும் சிக்கி பிறவுன், வெள்ளை, கறுப்பு ஆகிய நிறங்களிலும், பாபடிக்கல்ஸ், பாமாஸ், ஸ்பங்கிலர், நான்கு மாதம் நிரம்பிய பிறாமா ஒரு சோடியும், லோமன் பிறவுன் அடை முட்டைகளும் உடன் விற்பனைக்குண்டு. பிளான்ட் பரடைஸ், 152/2, கோவில் வீதி, யாழ்ப்பாணம். (29386)

1½ வயதுடைய யப்பானிஸ் பிச் ஆண் நாய், 1½ வயது பொமனேரியன் பெண் நாய், மூன்று மாதங்கள் நிரம்பிய அல்சேஷன் ஆண்குட்டி, கறுப்பு, சிவப்பு, வெள்ளை பொமனேரியன் நாய்க்குட்டிகளும் விற்பனைக்குண்டு. நடராசா, குலேந்திரன் வீதி, (ஆசைப்பிள்ளை மில் ஒழுங்கை), பலாலி வீதி, கோண்டாவில் கிழக்கு. (29394)

இறைச்சிக்கோழிகள் ஒரு கிலோவிலும் அதற்கு மேற்பட்ட நிறைகளிலும் விற்பனைக்குண்டு சுத்தம்செய்து கொடுக்கப்படும் தொடர்பு: 698/15, சபாபதி வீதி, தலையாழி, யாழ்ப்பாணம் (29387)

### கோலடன் பொட்

கோலடன் கொமட சேவல் குஞ்சுகள் உடன் விற்பனைக்குண்டு "மல்லிகாபதி" சந்தை கிழக்கு ஒழுங்கை, மானிப்பாய். (29376)

### தென்னம நாற்றுக்கள்

உடன் நடுகைக்குகந்த நல்லரக தென்னம் நாற்றுக்கள் சாதாரணம், செவ்விளனி, வத்தாவி இனங்கள் குறுகிய காலத்தில் பயன் தரக்கூடியவை விற்பனைக்குண்டு. மு. காங்கேசு ஐயா கடையடி, மீசாலை. (6953)

### தேவை

பெண் விற்பனையாளர்/காசாளர் தேவை. ஓரளவு ஆங்கில அறிவு தேவை. சொந்தக் கையெழுத்தில் முழு விபரத்துடன் விண்ணப்பிக்கவும். நல்லூர் வீடியோ சென்ரர், 19, முருகேசர் ஒழுங்கை, நல்லூர். (29326)

### மணமக்கள் தேவை

வயது 33, பரணி, 1இல் செவ்வாயுள்ள Netherland இல் பட்டதாரியாகி எஞ்ஜினியர், பிரஜா உரிமையுள்ள மணமகனுக்கு அழகிய பட்டதாரி பெண் தேவை. சகோதரி B. Sc., ஆசிரியை, வயது 25, அத்தம், எஞ்ஜினியர், டாக்டர் அல்லது தகுந்த மணமகன் தேவை. ஜாதகம், முழு விவரங்களுடன் எழுதவும். இல: 607, மே/பா உதயன், யாழ்ப்பாணம். (29390)

### மணமகள் தேவை

பெண், வயது 30 பூராடம், 7இல் செவ்வாய். பட்டதாரி Lecture, சகோதரி வயது 27, உத்தரம் 1. பட்டதாரி ஆசிரியை, எஞ்ஜினியர், டாக்டர், எக்கவுண்டன்ற் அல்லது தகுந்த மணமக்கள் தேவை. ஜாதகத்துடன் முழு விவரக் கடிதமூலம் தொடர்புகொள்ளவும். இல. 606, மே/பா உதயன், யாழ்ப்பாணம். [29389]

அந்தண வகுப்பைச் சேர்ந்த A/L படித்த, 31 வயது அழகிய பெண்ணுக்கு (பரணி, உதயச் செவ்வாய்) நிரந்தரத் தொழில் புரியும் நற்பண்புடைய மணமகன் தேவை. ஜாதகக் குறிப்புடனும், புகைப்படத்துடனும் தொடர்பு: இல. 608, மே/பா, உதயன், யாழ்ப்பாணம். (29392)

### மணப்பெண் தேவை

அந்தணர் வகுப்பைச் சேர்ந்த பிரான்ஸில் தொழில் புரியும் 33 வயது, அழகிய ஆணுக்கு 25 – 29 வயது அழகும், நற்பண்புமுள்ள O/L படித்த மணப்பெண் தேவை. ஜாதகக் குறிப்புடனும், புகைப்படத்துடனும் தொடர்புகொள்க. இல. 609, மே/பா உதயன், யாழ்ப்பாணம். (29393)

### அப்பியாசக் கொப்பி

25 மில்கவைற் நீலசோப் மேலுறைகள் அல்லது 25 மில்க்வைற் சலவைப் பவுடர் வெற்றுப் பக்கற்றுகள் எம்மிடம் சேர்ப்பத்தால் ஒரு அப்பியாசக் கொப்பி வழங்கப்படும். மில்கவைற் (சி-7312)

### பாலர் ஆசிரியர் பயிற்சி

கடைசித் தவணை க. பொ. த (சா/த) சனி, ஞாயிறும் நேரில் கற்க முடியாதோர் தபால் மூலமும் பயிலலாம் பாலர் ஆசிரியர் சங்கம் உயர்கலைக் கல்லூரி, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம் (6962)

### திருத்தவேலைகள்

சகல மணிக்கூடுகள், றேடியோக்கள் உத்தரவாதத்துடன் திருத்திக் கொடுக்கப்படும் நல்ல நிலையிலுள்ள மணிக்கூடுகள் உதிரிபாகங்களுக்காக வாங்கப்படும். டில்மா வாச் அன் றேடியோ வேர்க்ஸ், 284, ஸ்ரான்லி வீதி, (வானவில் கூல்பார் அருகில்) யாழ்ப்பாணம் கிளை கண்டி வீதி சாவகச்சேரி. (சி/7215)

### கார் விற்பனைக்கு

நல்ல நிலையில் உள்ள பெற்றோல் எஞ்சின் ஒக்ஸ்போர்ட் கார் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: ஆ. முத்துவேல், இல. 48/1, 1ஆம் ஒழுங்கை [ஐங்கரன் விளையாட்டுக் கழக ஒழுங்கை), பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம். (சி-7322)

### இலவச திருமண சேவை

30 வயது, புனர்பூசம், செவ்வாய் 7, இரகபாவம் 74, கனடாவில் சுயதொழில் புரிபவருக்கு மணப்பெண் தேவை. இலங்கையில் திருமணம் செய்து அழைக்கலாம். தொடர்பு: ஞாயிறு காலையில். விமலா, இலவச திருமண சேவை, யாழ்/நாச்சிமார் கோயிலடி. (29371)

### ஆனந்தம் சீயாக்காய்

சித்தமருத்துவ முறைப்படி தயாரிக்கப்பட்ட ஆனந்தம் சீயாக்காய்ப் பவுடர் பாவித்து பயன்பெறுங்கள். தங்களின் ஆலோசனையுடன் சீயாக்காய் லேபலில் உள்ள 'கோபுரம்' சின்னம் மூன்று சேர்த்து அனுப்பவும் சிறந்த ஆலோசனையில் குலுக்கல் மூலம் பரிசு 250/- வழங்கப்படும். 'ஆனந்தம்', கைதடி எனும் முகவரிக்கு அனுப்பவும். (6938)

### TUITION (கணிதம்)

ஆண்டு 9, 10, 11 கணிதம் சிறந்த பெறுபேறடைய கற்பிக்கப்படும். தனிப்பட வீடுகளிற்கு வந்தும் கற்பிக்கப்படும். O/Lஇல் சித்தி பெறத் தவறியோர்க்கு முன்னுரிமை. N. K. குகநேசன், உரும்பிராய் தெற்கு. (6960)

### பலாபலன்

94இல் குரு, சனி, ராகு, கேது மாற்றங்களை வைத்து எழுதப்பட்ட பலாபலன்கள் எல்லா ராசிகளுக்கும் சண் மாஸ்ரர் எழுதிய நூலைக் கேட்டு வாங்கவும். சோபிதா, யாழ்நகர். (29382)

### வெளிவந்துவிட்டது

பாலர் வகுப்புகளுக்கான அஷ்டலக்ஷ்மி, பாலர் தமிழ், ABC Book விற்பனைக்கு வந்துவிட்டது. ஸ்ரீ சுப்பிரமணிய புத்தகசாலை, யாழ்ப்பாணம், சிவா பிறின்டோர்ஸ், கைதடி. (6956)

### ரமணிசந்திரன

41 விதமான ரமணிச்சந்திரனின் நாவல்களும், கண்ணதாஸன், சிவசங்கரி, சுஜாதா மற்றும் பிரபல எழுத்தாளர்களின் நாவல்களும் விற்பனையாகிறது. பிரதிகளுக்கு முந்துங்கள். ராஜன் புத்தகசாலை, 12, பஸ் நிலையம், யாழ்ப்பாணம். (6958)

### ஒத்த மாறல

யாழ் மாவட்டத்து பாடசாலை ஒன்றில் பயிலுநர் ஆசிரியையாக (Primary) கடமையாற்றுபவர். அதே தரத்தரம் உள்ள மானிப்பாய் கல்விக் கோட்டத்தில் கற்பிக்கும் ஆசிரியருடன் ஒத்து மாற விரும்புகிறார். கடித மூலம் தொடர்பு கொள்ளவும் விளம்பர இல: 605, மே/பா உதயன், யாழ்ப்பாணம். (29388)

# இலங்கை இளங்கலைஞர் மன்றத்தின் 14ஆவது இசை விழா

கலாமண்டபம், சட்டநாதர் வீதி, நல்லூர்.

## முதலாம் நாள் - இன்று

"லிங்கம் கூல்பார்" நிறுவனத்தின் ஆதரவில்

மாலை

**4-00 — 5-00** மங்கள இசை
கே. ஆர். சுந்தரமூர்த்தி, கே. செல்வரத்தினம் — நாதஸ்வரம்
எஸ். ராமதாஸ், ஆர். பாஸ்கரன் — தவில்

**5-00 — 5-20** பாட்டு
கே. சங்கீதா, கே. தீபா, கே. பவப்ரியா, கே. தர்ஷினி, கே. ஜனனி — பாட்டு
ரி. ரேணுகா — வயலின்
பி. ரதிருபன் — மிருதங்கம்

**5-20 — 5-40** பல்லியம்
செல்வி கிருஷ்ணவேணி மயில்வாகனம் அவர்களின் மாணவர்கள்

**5-40 — 6-15** பாட்டு
எ. விக்னேஸ்வரன் — பாட்டு
எஸ். சர்வேஸ்வரசர்மா — வயலின்
எஸ். நாகராஜன் — மிருதங்கம்

**6-15 — 7-00** பாட்டு
வாசஸ்பதி ரஜீந்திரன் — பாட்டு
ஆர். எஸ். கேசவமூர்த்தி — வயலின்
கே. கண்ணதாஸன் — மிருதங்கம்

**7-00 — 7-30** மங்கள விளக்கேற்றல்
திரு. நா. அப்புலிங்கம் (லிங்கம் கூல்பார்)
திரு. வே. சிவசுப்பிரமணியம்
ஆர். மனோகரன்
திரு. ஆர். பஞ்சாட்சரலிங்கம் (கமலேஸ்வரி)

அருளுரை:
சோமசுந்தர பரமாச்சார்ய சுவாமிகள் (நல்லை ஆதீன முதல்வர்)

தலைவர்:
பேராசிரியர் அ. சண்முகதாஸ் (தலைவர், தமிழ்த்துறை யாழ். பல்கலைக் கழகம்)

பிரதம விருந்தினர்:
சிவத்தமிழ்ச்செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி
திரு. கா. மாணிக்கவாசகர் (அரசாங்க அதிபர்)
திரு. பொ. பாலசுந்தரம்பிள்ளை (கலைப் பீடாதிபதி)

சிறப்பு விருந்தினர்:
திரு. எஸ். கனகரத்தினம் (சட்டத்தரணி)
திரு. எஸ். பேரின்பநாதன் (தொண்டைமானாறு வைரவர் தேவஸ்தான தர்மகர்த்தா)

**7-30 — 8-30** கதாப்பிரசங்கம்
பொருள்: "கைத்தலம் நிறைகனி"
நிகழ்த்துபவர்: அருட்கவி சி. விநாசித்தம்பி
ஆர். எஸ். கேசவமூர்த்தி — வயலின்
எஸ். மகேந்திரன் — மிருதங்கம்

**8-30 — 9-30** பரதநாட்டியம்
ஸ்ரீ சக்தி நடனாலயம் வழங்கும் "நல்லைக் குறவஞ்சி" நாட்டிய நாடகம்
தயாரிப்பு: ஞானசக்தி கணேசநாதன்

கலாரஸிகர்கள் அனைவரும் அன்புடன் அழைக்கப்படுகின்றனர்!

வாழ்த்துவோர்:
**வெங்கடேஸ்வரா ஸ்ரோர்ஸ்**
97, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
[சி-7321]

உ
சிவமயம்

# திருமண அழைப்பு

அன்புடையீர்!

நிகழும் மங்களகரமான ஸ்ரீமுக வருடம் தைமாதம் 30ஆம் நாள் (12-02-1994) சனிக்கிழமை பகல் 11-05 மணியின்மேல் 12-05க்கு உள்ளாக வரும் ★ சுபய நட்சத்திர சுபமங்கள நல்வேளையில் ★

| எமது சரேஷ்ட புதல்வன் திருவளர் செல்வன் **சிவகுமாரன்** (எழுதுவினைஞர், பராமரிப்பு பகுதி யாழ் பல்கலைக்கழகம்) அவர்களுக்கும் | எமது ஏக புதல்வி திருவளர் செல்வி **தியாகவதி** அவர்களுக்கும் |
|---|---|

இறைவன் திருவருள் துணைகொண்டு பெரியோர்களின் ஆசியுடன் திருமாங்கல்ய தாரணம் இனிது நடைபெற இருப்பதால், அச்சமயம் தாங்களும் குடும்ப சகிதம் வருகைதந்து மணமக்களை ஆசீர்வதிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்

இங்ஙனம் தங்கள் அன்பின் வரவை நாடும்;

| | |
|---|---|
| க. வேலாயுதபிள்ளையும் துணைவி வே கனகம்மாவும், இல 45, புவனேஸ்வரி அம்பாள் வீதி, அரியாலை மேற்கு, யாழ்ப்பாணம். | நா கனகையாவும் துணைவி திருமதி பேரின்பவதியும், ஆலடி வீதி, கோண்டாவில் கிழக்கு, கோண்டாவில். |

(இவ்வோலை அழைப்பு)

[29396]

# முக்கிய அறிவித்தல்

## C. C. C கிளினிக்
[City Clinical Consultation]

ஹோட்டல் ஞானம்ஸ் இதுவரை மேல்மாடியில் இயங்கி வந்த மேற்படி எமது கிளினிக் நோயாளர்களின் வசதியை முன்னிட்டு கீழ் மாடிக்கு மாற்றப்பட்டுள்ளது என்பதைச் சகலருக்கும் அறியத்தருகிறோம்.

தொடர்ந்தும் எமது கிளினிக்கில், கண், பொது வைத்தியம் மற்றும் சகல வைத்திய நிபுணர் ஆலோசனைகளும் வழமைபோல் நடைபெறும் என்பதை அறியத்தருகிறோம்.

நன்றி!

உரிமையாளர்,
C. C. C கிளினிக்,
ஹோட்டல் ஞானம்ஸ்,
மணிக்கூட்டு வீதி,
யாழ்ப்பாணம்
(சி/7231)

# 'சித்த வைத்திய ஆய்வரங்கும் ஈழத்தின் சேவையில் மூத்த சித்த வைத்தியர்களைக் கௌரவித்தலும்'

காலம்: **13 - 02 - 1994**
ஞாயிற்றுக்கிழமை
மு. ப **9 00** மணி

இடம்: சித்த மருத்துவ அரங்கு
யாழ். பல்கலைக்கழகம்
கைதடி

சுதேச வைத்திய அபிவிருத்திச் சங்கம்
கைதடி.
(29403)

# 31ஆம் நாள் நினைவஞ்சலி



தோற்றம்: 18 — 12 — 1929

மறைவு: 13 — 01 — 1994

## சின்னத்தம்பி சண்முகரெத்தினம்

(உணவுக் கட்டுப்பாட்டுத் திணைக்கள ஓய்வுபெற்ற உத்தியோகத்தர்)

திதி: துதியை 12 – 02 – 1994


இப்பூவுலகில் அவதரித்துப் பல்கலையும் கற்ற எங்கள் பெரியப்பாவே! பெற்ற பிள்ளைகளைப் பறிகொடுத்துப் பெறாமக்களுடன் கூடிக்குலாவி விட்டுப் பிள்ளைகளைப் பின்பற்றிப் பேரின்பத்தை நாடிப் பெரியம்மாவைத் தவிக்கவிட்டு பேசாமல் பறையாமல் சென்றனையோ! உங்கள் ஆத்மா சாந்தி அடைய இறைவனைப் பிரார்த்திக்கிறோம்.

உற்றார், உறவினர், நண்பர்கள் வந்து பங்குபற்றுமாறு வேண்டுகிறோம்.

மனைவி, பெறாமக்கள்,
மருமக்கள்.

'சக்தி இல்லம்',
விதானை ஒழுங்கை,
கொக்குவில்.
(29226)

# நீங்காத நினைவின் இரண்டாம் ஆண்டு அஞ்சலி



## அமரர் சோமசுந்தரம் மயில்வாகனம்

(Retd. Asst. Conservator of Forest)

திதி: **12 - 02 - 1994**

உங்களை நாமிழந்து உருண்டது இரண்டு ஆண்டானாலும், அணைந்திடா உங்கள் நினைவுகள் அன்றோ. உங்கள் உருவமும், செயற்பாடுகளும் நிதமும் எம்மை வாட்டிக் கொண்டே இருக்கின்றன. நினைவுகள் சாவதில்லை, நீண்டுகொண்டே செல்லும். பசுமையான அந்த நாட்களை எண்ணி, எண்ணி வாழ்கிறோம்.

அன்புடன் நினைவு கூரும்;
மனைவி, குடும்பத்தினர்.

அம்மன் வீதி,
உரும்பிராய்.
(29357)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உதயன்

292/2, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.

## தெற்கில் சர்வாதிகாரம்

ஜனாதிபதித் தேர்தலுக்கு உரிய காலம் இவ்வருடப் பிற்பகுதிதான். அதாவது டிசம்பர் மாதத்திலேயே முறைப்படி அந்தத் தேர்தல் நடைபெற வேண்டும். ஆனால் அதற்கு முன்னரே தனக்குச் சாதகமான ஒரு சூழ்நிலையைத் தோற்றுவித்து, அச்சந்தர்ப்பத்தில் தேர்தலை நடத்தி, தாமே மீண்டும் ஜனாதிபதி சிம்மாசனத்தில் அமர வேண்டும் என்பது விஜேதுங்காவின் திட்டம் — ஆசை.

அதற்கேற்ற வகையிலேயே அவர் தனது அதிகாரத்தையும் வளங்களையும் பயன்படுத்தி வருகிறார். தாமே ஜனாதிபதியாக வந்துவிட வேண்டும் என்ற இலக்குடனேயே, நாடாளுமன்றம் ஜனாதிபதியைத் தெரிவு செய்யும் விதத்தில் தேர்தல் முறையை மாற்ற வேண்டும் என்ற யோசனையை முன்வைத்திருக்கிறார்.

காலுக்குப் பொருத்தமான சப்பாத்தைத் தைப்பதற்குப் பதில், சப்பாத்துக்கு அளவாகக் காலை வெட்டும் அவரது முயற்சி பலிக்காது, வெற்றி அடையாது, என்பதை அவர் ஓரளவு புரிந்து கொண்டிருக்க வேண்டும். எனினும் தென்னிலங்கை அரசியல் களத்தில் தமக்குப் பாதகமாக எதுவும் நடைபெற்றுவிடாமல் தடுப்பதில் அவர் மிகவும் அவதானமாகவே இருக்கிறார்.

அரசாங்கத்துக்கு எதிராகக் கொண்டுவரப்படும் நம்பிக்கையில்லாப் பிரேரணைக்கு முகம் கொடுக்காது தவிர்ப்பதற்காக, நாடாளுமன்றத்தின் அமர்வுகளை ஒத்திப்போடும் முயற்சி அவரது அத்தகைய அவதானத்துக்கு ஓர் எடுத்துக் காட்டாகும்.

கிழக்கில் அரசு நடத்தும் தேர்தல் தமிழர் பிரச்சினை சம்பந்தமாக உலகத்தை ஏமாற்றுவதற்கான ஒரு தந்திரம். தென் மாகாண சபைத் தேர்தலோ, தென்னிலங்கையில் அரசுக்கு உள்ள ஆதரவை நாடி பிடித்துப் பார்க்கும் பரீட்சார்த்தம். எனவே இந்த இரண்டிலும் தானே வெற்றி பெற்றாக வேண்டும் என்பது அரசின் இலக்கு.

நாடாளுமன்றத்தில் அரசுக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணை கொண்டு வரப்பட்டாலும் அது நிறைவேறக்கூடிய வாக்குப் பலம் எதிரணிக்கு இல்லை. ஆயினும் விவாதத்தின்போது அரசாங்கத்தின் முறைகேடுகள், அதிகார துஷ்பிரயோகங்கள் ஊழல்கள் என்பன அம்பலப்படுத்தப்படும். அதனால் மேற் குறிப்பிட்ட இரண்டு தேர்தல்களிலும் தனக்குப் பாதகம் உண்டாகலாம் என்பதே அரசின் அச்சம்.

அத்தகைய ஒரு சூழ்நிலை உருவாகிவிடக் கூடாதே என்பதற்காகவே அரசு நம்பிக்கையில்லாப் பிரேரணையை விவாதிக்காமல் தடுத்துவிட முனைகிறது.

அரசாங்கத்தின் குறைகளைச் சுட்டிக்காட்டி நம்பிக்கையில்லாப் பிரேரணை கொண்டு வருவது முற்றுமுழுதான ஜனநாயக நடவடிக்கையாகும். அதற்குப் பயந்து நாடாளுமன்ற அமர்வுகளை ஒத்திவைப்பது முற்றுமுழுதான அதிகார துஷ்பிரயோகமாகும்; சர்வாதிகாரமாகும்.

தென் மாகாணசபை விவகாரத்தில் அரசாங்கம் பல அரசியல் தில்லுமுல்லுகளை மட்டும் நடத்தி அதனைக் கலைக்கவில்லை. அதிகாரத்தையும் துஷ்பிரயோகம் செய்திருந்தது. அந்தப் பழக்கத்தில் இப்போது நாடாளுமன்ற அமர்வுகளைத் தனக்கு வாய்ப்பாக ஒத்திவைக்க முனைகிறது.

ஜனநாயகம் என்ற பெயரில் ஆளுங்கட்சியான ஐக்கிய தேசியக் கட்சியின் சர்வாதிகாரமே தென்னிலங்கையில் நடைபெறுகிறது என்பதற்கு இதனைவிட வேறு என்ன அத்தாட்சி தேவை? சட்டங்களை அரசாங்கம் தனது வசதிக்கும் வாய்ப்புக்கும் ஏற்ற மாதிரி வளைத்தெடுப்பதும், சட்டங்களை மீறிச் செயற்படுவதுமே அங்குள்ள ஜனநாயகமாக இருக்கிறது!

அப்படியிருக்க, ஜனாதிபதியும் அரசினரும் தமிழர் விவகாரத்தை ஜனநாயக வழி நின்று, அரசியல் தீர்வு முறையை நாடித் தீர்ப்பார்கள் என்று எதிர்பார்ப்பது எப்படி?

---

### நேட்டோ விமானத் தாக்குதல் நடத்தினால்

# ஐ.நா., வெளிநாட்டு தொண்டர் தடுத்துவைக்கப்படுவர்

### செர்பிய தளபதி எச்சரிக்கை

ஜெனிவா, பெப். 12

பொஸ்னியாவின் தலைநகர் சரயேவோவில் உள்ள செர்பிய நிலைகள் மீது நேட்டோ விமானத்தாக்குதல் நடத்துமானால், செர்பியக் கட்டுப்பாட்டில் உள்ள பகுதிகளில் பணிபுரியும் ஐ.நா, மற்றும் வெளிநாடுகளைச் சேர்ந்த தொண்டர்கள் தடுத்து வைக்கப்படுவார்கள் என்று எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

சரயேவோவில் உள்ள செர்பிய படைத்தளபதி இந்த எச்சரிக்கையை விடுத்திருக்கிறார்.

இதேவேளை— சரயேவோவில் யுத்த நிறுத்தத்தைக் கண்காணிப்பதற்காக ஐ.நா. படைகள் தயார் நிலையில் வைக்கப்படுவதாக தெரிவிக்கப்பட்டது.

இதனிடையில் புதன் நள்ளிரவு முதல் அமுலுக்கு வந்த யுத்த நிறுத்தத்தை மீறி சரயேவோவில் ஆட்டிலறித் தாக்குதல்கள் நடத்தப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

சரயேவோவில் உள்ள கனரக ஆயுதங்களை, தலைநகரில் இருந்து 20 கிலோமீற்றர் தூரத்துக்கு அப்பால் கொண்டு செல்லவேண்டும். அல்லது ஐ.நா.வின் பொறுப்பில் அவற்றை வைக்கவேண்டும் பத்துத் தினங்களுக்கு இந்த நிபந்தனை நிறைவேற்றப்படாத இடத்து, செர்பிய நிலைகள் மீது நேட்டோ படைகள் விமானத் தாக்குதல்களை நடத்தும் என்று நேட்டோ அலைகாலக்கெடு விதித்திருப்பது தெரிந்ததே. (ஒ-எ)

# கைதிக்கு வருடம் ரூ. 24,930 செலவு

### நாடாளுமன்றத்தில் தகவல்

கொழும்பு, பெப். 12

சிறைச்சாலையில் உள்ள ஒரு கைதிக்கு வருடம் ஒன்றுக்கு 24 ஆயிரத்து 930 ரூபா செலவிடப்படுகிறது

நீதி அமைச்சர் ஹரோல்ட் ஹேரத் கடந்தவெள்ளி நாடாளுமன்றத்தில் இதனைத் தெரிவித்தார்.

தண்டப்பணம் கட்ட முடியாத நிலையில் சிறைச்சாலைகளில் ஆயிரக்கணக்கில் கைதிகள் உள்ளனர் என்றும் —

தண்டப்பணத்தை பகுதிபகுதியாக கைதிகள் கட்ட இனி வசதி செய்யப்படவிருக்கிறது என்றும் — அமைச்சர் கூறினார். (இ-3)

# அனுராவுக்கு சரியான பாடம் படிப்பிப்பர் மக்கள்

### மகனைச் சாடுகிறார் தாய்

காலி மாவட்ட ஐ.தே.க. தேர்தல் பிரசாரப் பொறுப்பாளராக நியமிக்கப்பட்டுள்ள எனது மகன் அனுராவுக்கு தென்பகுதி மக்கள் சரியான பாடம் படிப்பிப்பார்கள்.

சுதந்திரக் கட்சித் தலைவர் திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா இவ்வாறு தெரிவித்தார்.

காலி நகரசபை மண்டபத்தில் நடந்த பிரசாரக் கூட்டத்தில் பேசுகையில், மேல் மாகாணசபையைக் கலைக்கவும் முயற்சி நடப்பதாகவும் அவர் குறிப்பிட்டார்.

தென் மாகாணசபையின் நிர்வாகத்தை பொதுசன முன்னணியே மீண்டும் கைப்பற்றும் என்றும் அவர் தெரிவித்தார். (ஒ-எ)

### அரச ஊழியர்களுக்கு

# மோட்டார் சைக்கிள் வாங்குவதற்கு கடன்

அரசாங்க ஊழியர்கள் உத்தியோகபூர்வமான கடமைகளுக்காக மோட்டார் சைக்கிள்கள், ஸ்கூட்டர்கள் ஆகியவற்றை கொள்வனவு செய்ய கடன் வழங்கப்படவிருக்கிறது.

அரசாங்கதுறையில் உள்ள சகல நிரந்தர மற்றும் சமயாசமய ஊழியர்கள் இந்தக் கடனைப் பெறுவதற்கு உரித்துடையவர்களாவர்.

பொதுநிர்வாக அமைச்சர் வின்சன் பெரேராவின் யோசனைப்படி இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

ஒரு ஊழியர் ஆகக்கூடிய கடனாக 22 ஆயிரத்து 500 ரூபாவை பெறமுடியும்.

இது தொடர்பான சுற்றறிக்கையை அமைச்சரின் செயலாளர் விடுத்துள்ளார்,

பிரயாணப்படி வழங்க முன்னர் செய்யப்பட்ட ஏற்பாடு ரத்துச்செய்யப்பட்டுள்ளதாக இந்த அறிக்கை சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

# கிணற்றில் தள்ளி விழுத்தி சிப்பாய் ஒருவர் கொலை

பத்தாயிரம் ரூபா பெறுமதியான தங்க நகைகளுடன் திருகோணமலையில் இருந்து தமது சொந்த ஊரான பண்டாரகமவுக்குத் திரும்பிய இராணுவச் சிப்பாய் ஒருவர் அன்றைய தினமே அவரது நண்பர் ஒருவரால் கிணற்றில் தள்ளி விடப்பட்டு கொலை செய்யப்பட்டார் என்று தெரிவிக்கப்பட்டது.

டபிள்யு. லெஸ்லிகுமாரா என்ற அச்சிப்பாயின் சடலம் பண்டாரகமவில் வெலிமில்ல பகுதியில் உள்ள கிணறு ஒன்றில் இருந்து கண்டெடுக்கப்பட்டது.

நீரில் மூழ்கியதால் மரணம் சம்பவித்தது என்று மரண விசாரணை அதிகாரி அறிவித்த தீர்ப்பு குறித்து அதிருப்தியடைந்த பண்டாரகம பொலீஸார் தொடர்ந்து நடத்திய புலன்விசாரணையை அடுத்து இளைஞர் ஒருவனைக் கைது செய்தனர்.

அந்த இளைஞர் விசாரணையின் போது அச்சிப்பாய் எப்படிக் கொல்லப்பட்டார் என்பதை விவரித்தார் என்றும் —

அவர் ஹொரணை நீதிவானிடம் ஒப்புதல் வாக்கு மூலம் அளிக்கச் சம்மதித்துள்ளார் என்றும் தெரிவிக்கப்படுகிறது. (ஒ-எ)

## சிக்காக்கோ நூற்றாண்டு விழா

யாழ்ப்பாணம், பெப். 12

பருத்தித்துறை ஸ்ரீ ராமகிருஷ்ண சாரதா சேவாச்சிரமம், சுவாமி விவேகானந்தர் சிக்காக்கோ நூற்றாண்டு விழாவை இன்று சனிக்கிழமை, யாழ்ப்பாணத்தில் நாவலர் கலாசார மண்டபத்தில் நடத்துகிறது.

யாழ். மாநகர ஆணையாளர் திரு. வே. பொ. பாலசிங்கம் தலைமையில் இன்று பிற்பகல் 3 மணிக்கு நிகழ்ச்சிகள் ஆரம்பமாகும், நிகழ்ச்சியில், சுவாமி விவேகானந்தர் சிக்காக்கோ நூற்றாண்டு கட்டுரைப் போட்டிக்கான பரிசில்கள் வழங்கப்படும்.

யாழ். பல்கலைக்கழக சிரேஷ்ட விரிவுரையாளர் திருமதி நாச்சியார் செல்வவிநாயகம் சிறப்புச் சொற்பொழிவாற்றுவார்.

இறுதியில் கலை நிகழ்ச்சி இடம்பெறும் (ஒ)

## கருத்தரங்கு

பாஷையூர் பகுதி மக்களுக்கான சுகாதாரக் கருத்தரங்கு ஒன்று இன்று சனிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு பாஷையூர் புனித அந்தோனியார் கல்யாண மண்டபத்தில் நடைபெறும்.

யாழ் மாநகர சுகாதார பகுதியினரால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள இக்கருத்தரங்கில் சுகாதார அதிகாரிகள் உரையாற்றுவார்கள். (ஒ-17)

## வீரமரணம்

கடந்த செவ்வாயன்று யாழ். மாவட்டத்தில் இடம்பெற்ற விபத்துச் சம்பவம் ஒன்றில் விடுதலைப் புலிகள் இயக்கப் போராளியான சிந்து (நவரத்தினம் சந்திரகலா — களபாவோடை, ஏழாலை) என்பவர் வீரச்சாவடைந்தார். (இ 5)

## விளையாட்டு போட்டி

தொண்டமனாறு வீரகத்திப்பிள்ளை மகாவித்தியாலய வருடாந்த மெய்வல்லுநர் போட்டி இன்று சனிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு வித்தியாலய அதிபர் திரு செ யோகச்சந்திரன் தலைமையில் நடைபெறும். (ஒ-155)

★ ★ ★

உடுப்பிட்டி இலமயாணன் அ.த.க. பாடசாலையின் வருடாந்த இல்ல விளையாட்டுப் போட்டி இன்று சனிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு பாடசாலை அதிபர் திரு எம். குட்டித்தம்பி தலைமையில் மேஜர் சலாம் விளையாட்டரங்கில் நடைபெறும். (ஒ-155)

## கொலையுண்டவர் ஹேமாவின் சகோதரர்

பம்பலப்பிட்டியில் கொலையுண்ட சுவீடனின் இலங்கைக்கான முன்னாள் தூதுவர் பத்திரபால விக்கிரமதுங்க முன்னாள் ஜனாதிபதி பிரேமதாஸாவின் துணைவியார் ஹேமா பிரேமதாசாவின் சகோதரர் என்று தெரிவிக்கப்பட்டது

பம்பலப்பிட்டியில் உள்ள அவரது வீட்டில் கடந்த செவ்வாய் இவர் சடலமாக மீட்கப்பட்டது தெரிந்ததே.

இவரது கொலை குறித்து பொலிஸார் விசாரணை செய்து வருகின்றனர்.

# சரியான சமய வாழ்வுக்கு விவேகானந்தரின் செய்தி

யாழ்ப்பாணம், பெப். 12

சுவாமி விவேகானந்தரின் செய்தி, இவ்வேளையில் மனித இனத்தைச் சரியான சமய வாழ்வுக்கு இட்டுச் செல்லும் வண்மையில் அமைந்தது.

இவ்வாறு தெரிவித்துள்ளார் ராமகிருஷ்ண மிஷன் இலங்கைக் கிளையின் தலைவர் தவத்திரு. சுவாமி ஆத்மகணானந்தா.

யாழ். நகரில் இன்று நடக்கும் சுவாமி விவேகானந்தர் சிக்காக்கோ நூற்றாண்டு விழா குறித்து அனுப்பியுள்ள செய்தியிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

அந்தச் செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

1893ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 11ஆம் திகதி சிக்காக்கோவில் இடம்பெற்ற உலகச் சமயப் பெருவிழாவில் சுவாமி விவேகானந்தர் ஆற்றிய பேருரை வரலாற்றுச் சிறப்பு மிக்கதாகும். சுவாமி விவேகானந்தரின் சிக்காக்கோ நூற்றாண்டு விழா உலகெங்கும் சமய வாழ்விற்கு புத்துணர்ச்சியையும், நவீன உத்



சுவாமி ஆத்மகணானந்தா

வேகத்தையும், மறுமலர்ச்சியையும் தந்துள்ளது.

அக்காலச் சமுதாயங்களைப் பரிகாசமான நிலைக்கு ஆளாக்கி விட்டுள்ள...

''நமக்குத் தேவையானது போற்றுதற்குரிய குண விசேடங்களே'' — என்றார் சுவாமி விவேகானந்தர். மனித முன்னேற்றமே சுவாமி விவேகானந்தரின் சமய உழைப்பை வடுருவிச் செல்லும் சித்தாந்தமாகும்.

துரதிர்ஷ்ட வசமாக மனித இனம் சமய வெறியாட்டத்தால் பீடிக்கப்பட்டு பலவித பாதிப்பிற்கு உள்ளாகி இருக்கும் இவ்வேளையில், சுவாமி விவேகானந்தரின் செய்தி மனித இனத்தைச் சரியான சமய வாழ்வுக்கு இட்டுச் செல்லும் வண்மையில் அமைந்தது

பருத்தித்துறையில் உள்ள ஸ்ரீசாரதா சேவாச்சிரமம் பல ஆண்டுகளாக சுவாமி விவேகானந்தரின் செய்தியை மூலை முடுக்கெல்லாம் பரப்பி வருவதைக் கண்டு நாங்கள் ... என்று கூறப்பட்டுள்ளது. (அ)

## இதழியல் கற்கைநெறி

யாழ் பல்கலைக்கழக புறநிலைப் படிப்புக்கள் அலகின் ஏற்பாட்டில் இடம் பெறவுள்ள இதழியல் அடிப்படைக் கற்கைநெறி தொகுதி 111 இன் ஆரம்பவிழா இன்று சனிக்கிழமை பி.ப. 2 30 மணிக்கு பல்கலைக்கழக புவியியற்துறை மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

ஆரம்ப உரையை கலைப் பீடாதிபதி பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளை நிகழ்த்துவார்.

வார இறுதி நாட்களில் தொடர்ந்து இருமாதகாலம் மேற்படி கற்கை நெறிக்குரிய விரிவுரை வகுப்புகள் நடைபெறும். (ஒ)

## "ரஸெப்" ஆங்கில நெறி

யாழ்ப்பாணம், பெப். 12

ஆசிரியர், எழுதுவினைஞர், பாடசாலையை விட்டு விலகியோருக்கான ஆங்கில வகுப்புக்கள் இன்று சனி பி. ப. 2 மணிக்கு பலாலி ஆசிரிய கலாசாலையில் ஆரம்பமாகின்றன.

6 மாத காலம், வார இறுதிகளில் மட்டும் வகுப்பு நடைபெறும். இறுதிப் பரீட்சையில் தேறுவோருக்கு கொழும்பு மத்திய ''ரஸெப்'' நிறுவனத்தினால் சான்றிதழ் வழங்கப்படும்

ஏற்கனவே சாதாரண தரத்தில் சித்தியடைந்தவர்களுக்கான ''ரஸெப்'' உயர்தர நெறியொன்று நாளை ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் ஆரம்பமாக உள்ளதாகவும் அறிவிக்கப்படுகிறது. (ஒ)

## சைவசமய அறிவுப் பரீட்சை

யாழ்ப்பாணம், பெப். 12

வண்ணை-சாந்தையர்படம் ஸ்ரீ கற்பக விநாயகர் கோயில் சைவ சமய அபிவிருத்திக் கழகத்தினரால் 40 வருடகாலமாக நடத்தப்படும் சைவ சமய அறிவுப் பரீட்சை நாளை ஞாயிறு காலை 9-30 மணிக்கு யாழ் இந்து மத்திய கல்லூரி, யாழ். வண்ணை நாவலர் மகாவித்தியாலயம், யாழ். இந்துக் கல்லூரி, யாழ். வைத்தீஸ்வராக் கல்லூரி ஆகிய 4 பரீட்சை நிலையங்களில் நடைபெறும்

இப்பரீட்சை ஆண்டு 1 தொடக்கம் ஆண்டு 13 வரையிலான வகுப்புக்களுக்கு நடைபெறும். இப்பரீட்சைக்கு இம்முறை சுமார் 1835 மாணவர்கள் தோற்றுகின்றார்கள் (ஒ)

## செட்டிகுளத்தில் சிங்கள குடியேற்றம் தொடர்கிறது

செட்டிகுளம் பகுதியில் இராணுவப் பாதுகாப்புடன் சிங்களவர்களைக் குடியமர்த்துவது தொடருவதாகத் தெரிவிக்கப்படுகிறது

அவர்களுக்கு குடியிருக்க வீடுகள் வழங்கப்படுகின்றன என்று தெரிவிக்கப்படுகிறது.

தமிழர்களின் வீடுகளை முஸ்லிம்களும் சிங்களவர்களும் ஆக்கிரமித்து வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது. [இ-எ]

# இளங்கலைஞர் மன்ற இசைவிழா ஆரம்பம்

இளங்கலைஞர் மன்றத்தின் 14ஆவது இசை விழா இன்று சனிக்கிழமை சட்டநாதர் வீதியிலுள்ள கலா மண்டபத்தில் ஆரம்பமாகின்றது. தொடர்ந்து 15 தினங்கள் இசை விழா இடம் பெறும்.

முதல் நாள் நிகழ்ச்சிகள் இன்று மாலை 4 மணிக்கு மங்கள இசையுடன் சிறப்புற ஆரம்பமாகவுள்ளன.

பிரதம விருந்தினர்களாக சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி, யாழ். அரச அதிபர் திரு. கா. மாணிக்கவாசகர், யாழ். பல்கலைக்கழக கலைப் பீடாதிபதி திரு. பொ. பாலசுந்தரம் பிள்ளை ஆகியோர் கலந்து கொள்கின்றனர்.

யாழ் பல்கலைக்கழக தமிழ் துறைத் தலைவர் பேராசிரியர் அ. சண்முகதாஸ் தலைமையில் நிகழ்ச்சிகள் நடைபெறும். இரவு 8-30 மணிக்கு பரத நாட்டியம் இடம்பெறும். (ஒ-111)

# பக்கிங்ஹாம் மாளிகை மீது இறங்கிய நிர்வாண நபர்!

எலிஸபெத் மகாராணியின் ''பக்கிங்ஹாம்'' அரண்மனைக் கூரைமீது 'பராகிளைடர்' மூலம் வந்திறங்கிய நிர்வாண மனிதன் ஒருவரை பொலீஸார் கைது செய்தனர் என அறிவிக்கப்படுகிறது.

கடந்த சனியன்று இடம் பெற்ற இச் சம்பவம் அரச குடும்பத்தின் பாதுகாப்பு விதிகளை மீறிய பாரதூரமான செயல் எனக் கருதப்படுகிறது.

ஜேம்ஸ் மில்லர் (வயது 30) என்ற அமெரிக்க இளைஞரே நிர்வாண நிலையில் மகாராணியின் அரண்மனைக் கூரை மீது ''பராகிளைடரில்'' சென்று குதித்துள்ளார் என்றும் —

கடந்த ஆண்டு நவம்பரில் லாஸ்வேகாஸில் நடைபெற்ற உலக அதிபார குத்துச்சண்டை சம்பியன் போட்டியின் போது போட்டி நடைபெற்றுக் கொண்டிருந்த மேடைமீது 'பராசூட்' மூலம் சென்று குதித்து போட்டியைக் குழப்பியடித்த நபரே அந்த இளைஞர் என்றும் விசாரணைகளில் இருந்து தெரிய வந்திருப்பதாக பொலீஸார் தெரிவித்துள்ளனர். (ஒ-5)

# இன்ஸ்பெக்டர் பறிகொடுத்த பிஸ்டல் பொரளையில் மீட்பு

வெலிகம பொலீஸ் நிலையத்தைச் சேர்ந்த சப் இன்ஸ்பெக்டர் ஒருவரிடம் இருந்து திருடப்பட்டதாகக் கூறப்படும் பிஸ்ரலும் ரவைகளும், பொரளைப் பொலீஸாரால் நபர் ஒருவரிடம் இருந்து கைப்பற்றப்பட்டன என்று தெரிவிக்கப்படுகிறது.

திருட்டுச் சம்பவம் தொடர்பாக பிடிபட்ட ஒரு நபர் அளித்த தகவலை அடுத்து பொலீஸார் அவற்றைக் கைப்பற்றினர்.

இத் திருட்டுச் சந்தேக நபரே பிஸ்ரலையும் ரவைகளையும் களவாடினார் என்றும்— பின்னர் அவற்றை இன்னொரு நபருக்கு 60 ஆயிரம் ரூபாவுக்கு விற்றார் என்றும் தெரியவந்தது. அவற்றை வாங்கிய நபரே பொலீஸாரினால் கைது செய்யப்பட்டார். (ஒ-எ)

# ஜே.வி.பி. பிராந்திய தலைவர் காவலிலிருந்து தப்பினார்

கொழும்பு, பெப். 12

கடந்த மாதம் 28 ஆம் திகதி புத்தள பொலீஸ் பாதுகாப்பில் இருந்து பெலிகெப்பிலி ராஜா என்றழைக்கப்படும் பண்டா என்ற பெயருடைய ஜே வி. பி. பிராந்தியத் தலைவர் தப்பிவிட்டார் என்று அறிவிக்கப்படுகிறது.

இது தொடர்பாக புத்தள பொலீஸ் நிலையத்தைச் சேர்ந்த சார்ஜன்ட் ஒருவரும் ரிசர்வ் பொலீஸ் கான்ஸ்டபிள் ஒருவரும் தற்காலிக வேலை நீக்கம் செய்யப்பட்டனர்,

ஜே. வி. பி. தீவிரவாதம் தென்பகுதியில் உச்சக்கட்டத்தில் இருந்த சமயம் தப்பி ஓடிய ஜே. வி. பி. தலைவர் பதினைந்து கொலைகளையும் பல கொள்ளைகளையும் நடத்தினார் என்று சந்தேகிக்கப்படுகிறது.

தப்பியோடிய சந்தேக நபரை மீண்டும் பிடிக்க விசேட பொலீஸ் குழு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது என்று உதவி பொலீஸ் அதிபர் எச். ஏ. இலங்கசிரி தெரிவித்தார்.

# இன்று நடப்பவை

யாழ்ப்பாணம், பெப். 12

யாழ். பல்கலைக்கழக புறநிலைப்படிப்புக்கள் அலகின் ஏற்பாட்டில் இடம் பெற்று வந்த புகைப்படக்கலை அடிப்படைப் பயிற்சி நெறியின் பதினொராவது தொகுதியினருக்கான சான்றிதழ் வழங்கும் வைபவம் இன்று சனிக்கிழமை பி. ப 3 30 மணிக்கு வர்த்தக முகாமைத்துவ மண்டபத்தில் இடம்பெறவுள்ளது கலைப்பீடாதிபதி பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளை சான்றிதழ்களை வழங்கவுள்ளார் (ஒ)

★ ★ ★

யாழ். றோட்டரக்ட்கழகம் நடத்தும் பேராசிரியர் ஹூலர் ஜெயசிங்கம் ஞாபகார்த்த பொது அறிவுப் போட்டித் தொடரில், வலிகாமப்பிரிவுக்கான போட்டிகள் இன்று காலை 9 00 மணிக்கு உடுவில் மகளிர் கல்லூரியில் நடைபெறும். (ஒ)

★ ★ ★

யாழ். மாவட்ட சுரப்பந்தாட்ட சங்க நிர்வாகிகளுடனான கலந்துரையாடல் ஒன்று இன்று சனி முற்பகல் 9-30 மணிக்கு கோண்டாவிலில் உள்ள அரசியல் துறையின் யாழ் மாவட்ட செயலகத்தில் நடைபெறவுள்ளது.

சுரப்பந்தாட்ட சங்க நிர்வாக சபை உறுப்பினர்கள் அனைவரையும் அதில் கலந்து கொள்ளுமாறு யாழ் மாவட்ட விளையாட்டு அபிவிருத்திக் குழு கேட்டுள்ளது. (த-5)

★ ★ ★

ஆண்டு 7 முதல் 11 வரையான வகுப்புக்களில் ஆங்கிலம் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான பெப்ரவரி மாத கருத்தரங்கு இன்று சனிக்கிழமை காலை 8-30 மணிக்கு சுன்னாகம் இராமநாதன் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

கோப்பாய், உடுவில், தெல்லிப்பழை ஆகிய கோட்ட பாடசாலை ஆசிரியர்கள் அதில் கலந்து கொள்வர். (த-5)

★ ★ ★

யாழ் மாவட்ட சிக்கன கடன் வழங்கு கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத்தின் யாழ். பிராந்திய மகளிர் குழுக் கூட்டம் இன்று மாலை 4 15 மணிக்கு புனித சார்ள்ஸ் மகாவித்தியாலயத்தில் நடைபெறும் (த-30)

★ ★ ★

யாழ் மாவட்ட சாரணர்களுக்கான அணித்தலைவர் பயிற்சி நெறி இன்று காலை 8.30 மணியளவில் மாவட்ட சாரண ஆணையாளர் திரு. இ. மகேந்திரனால் ஆரம்பித்து வைக்கப்படும் (க)

★ ★ ★

வலிகாமம் மேற்கு உதைபந்தாட்ட நிர்வாக சபைக் கூட்டம் இன்று சனிக்கிழமை காலை 9 00 மணிக்கு சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரியில் நடைபெறும். (க)

### பனைவளம் பெருக்கி மனை வளம் காப்போம்

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்கள்

## சித்தாந்த கலாநிதி இ. வே. கந்தையா
(சைவம் — ஓய்வுபெற்ற வைத்தியர்)

அன்னார் தங்கோடை காரைநகரைப் பிறப்பிடமாகக் கொண்டவர். வசிப்பிடமான மலேசியாவில் 7-2-94 இல் காலமானார்.

இவர் காலம் சென்ற பாறுபதிப்பிள்ளையின் அன்புக் கணவரும், சைதன்யதேவி, குமாரசிவம் (பொறியியலாளர் மலேசியா), சின்மயதேவி (கனடா), Dr. பரசிவம் (அவுஸ்திரேலியா), உமாபதிசிவம் (M. S. C அவுஸ்திரேலியா) ஆகியோரின் அன்புத் தந்தையும் நமசிவாயம் (ஓய்வுபெற்ற ஆசிரியர்), காலஞ்சென்ற சோமசுந்தரம் (ஆசிரியர்) ஆகியோரின் மாமனாரும் Dr. ஆதிசக்திசிவஞானம் (கொழும்பு), Dr. ஆதிகணபதி (கனடா), சக்திகணபதி (பொறியியலாளர் கனடா), சிவசக்தி அகிலன் (லண்டன்) ஆகியோரின் பேரனும் ஆவார்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

தகவல்
அ. நமசிவாயம்
புளாய் (29406)

## சிவஸ்ரீ ப. கணேசராஜக் குருக்கள்
(கணேசஐயர்)

புங்குடுதீவு 10 ஆம் வட்டாரம் கண்ணகி அம்மன் கோவில், கலட்டி வரசித்தி விநாயகர் கோவில் பிரதம குரு சிவஸ்ரீ ப. கணேசராஜக் குருக்கள் அவர்கள் (கணேசஐயர்) 09 - 02 - 1994 அன்று கொழும்பில் அகாலமரணமானார்.

அன்னார் பஞ்சாட்சரக் குருக்களின் (பஞ்சஐயர்) அன்பு மகனும், நாகரத்தினம்மாவின் அன்புக் கணவரும், ரவீந்திரசர்மா, பசிரதன், லலிதாம்பாள், நடராசா, வாகீஸ்வரன், வைஷ்ணவாசனி, மீனலோசனி ஆகியோரின் அன்புத் தந்தையும், ரோகினி, சிவசண்முகநாதன், உஷாதேவி ஆகியோரின் அன்பு மாமனும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் கொழும்பில் நடைபெறும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
நாகரத்தினம்மா
(மனைவி)
இல. 141/1, கோவில் வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம். (சி/7330)

## சின்னத்தம்பி - சிவராசா
(இளைப்பாறிய பொலிஸ் உத்தியோகத்தர்)

கொல்லங்கலட்டியைப் பிறப்பிடமாகவும், புன்னாலைக்கட்டுவன் தெற்கை வசிப்பிடமாகவும் கொண்ட இவர் 10 - 02 - 94 வியாழனன்று காலமானார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் அன்று பிற்பகல் புன்னாலைக்கட்டுவனில் நடைபெற்றன. இவர் பரமேஸ்வரியின் பாசமிகு கணவரும், காலஞ்சென்ற சறோஜினி, சாந்தினி (பிரான்ஸ்), கணநாதன், தயாளினி, விசாலினி (மாணவி யா / வசாவிளான் ம. வி) ஆகியோரின் அன்புத் தகப்பனாரும், சுழிபுரம் மேற்கு சப்பையா தில்லையம்பலம் (பிரான்ஸ்) அவர்களின் அன்பு மாமனாரும், அரவிந், ஆனந் ஆகியோரின் அன்புப் பேரனுமாவார். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்
புன்னாலைக் கட்டுவன்,
தெற்கு. (6799)

## பரமேஸ்வரி துரைராசா

தம்பலையைச் சேர்ந்த பரமேஸ்வரி துரைராசா (8-2-94) அன்று காலமானார்.

இவர் காலஞ் சென்ற பொ. கதிரவேற்பிள்ளை (முதலியார்), புவனேஸ்வரியின் மூத்த மகளும், செ. இராமசாமி, சிவக்கொழுந்துவின் அருமை மருமகளும், இ. துரைராசாவின் (முன்னை நாள் H. N. B. முகாமையாளர்) ஆருயிர் மனைவியும், காலஞ்சென்ற தவராசா (H. N. B.), சிவராசா (H. N. B.), செல்வராசா (H. N. B.), யோகராசா (கனடா), தேவராசா (U. K.) ஆகியோரின் அருமைத் தாயாரும், சி. வசந்தியின் மாமியும், சி. நிருஷா, சி. அனோஜன் ஆகியோரின் பேர்த்தியும், க. நடேசன், க. ஆனந்தநடேசன், க. தில்லைநடேசன், திருமதி க. சிவாம்பிகை, திருமதி பொ. பார்வதபத்தினிதேவி ஆகியோரின் சகோதரியும், ந. இலட்சுமிப்பிள்ளை, ஆ. செல்லம்மா, தி. சறோஜினி, செ. கந்தசாமி, ப. பொன்னையா ஆகியோரின் மைத்துனியுமாவார்.

அன்னாரது இறுதிக் கிரியைகள் 13-2-94 ஞாயிற்றுக்கிழமை காலை 9 00 மணியளவில் நடைபெறும்.

தகவல்:
க. முருகேசு
(சிறியதந்தை)
தெல்லியடை வீதி,
தும்பளை,
பருத்தித்துறை. (29395)

## திருமதி தங்கரத்தினம் (தேவி) செல்வரத்தினம்

திருநெல்வேலியைப் பிறப்பிடமாகவும், உரும்பிராயினை புகுந்த இடமாகவும் கொண்டு வாழ்ந்த திருமதி தங்கரத்தினம் [தேவி] செல்வரத்தினம் அவர்கள் கடந்த 9 - 2 - 94 புதன்கிழமை கொழும்பில் காலமானார்.

இவர் செல்வரத்தினத்தின் அன்பு மனைவியும், சிவசுப்பிரமணியத்தின் அன்புச் சகோதரியும் திருமதி நர்மதா சோதிலிங்கம், கபிலன் [ஜேர்மனி], திருமதி கௌரி கணேஸ்வரன் [பிரான்ஸ்], ஜமுனா, கஜமுகன் [ஜேர்மனி], குமரகுரு [ஜேர்மனி], மங்களேஸ்வரி [சசா] ஆகியோரின் அன்புத் தாயாரும், சோதிலிங்கம், கணேஸ்வரன் [பிரான்ஸ்], வாசுகி ஆகியோரின் அன்பு மாமியாரும், சுதன், அபுராஜிதன், சுதேஷ்ணா, சஜனி, கார்த்திகா, கலைச்செல்வி ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் கொழும்பில் நடைபெறும். இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
செ நவரத்தினம் (மணியம்)
(மைத்துனர்)
டிப்போ அருகாமை,
உரும்பிராய் தெற்கு,
உரும்பிராய். (29398)

# வீதி விபத்து: நேற்று மட்டும் மூவர் காயம்

யாழ்ப்பாணம், பெப். 12 வீதி விபத்துக்கள் காரணமாக யாழ்ப்பாணப் பகுதியில் நேற்று மட்டும் மூவர் காயம் அடைந்தனர்.

யாழ். கோவில் வீதியில் இடம் பெற்ற விபத்தில் இராயப்பு திரேசம்மா (வயது 59) என்பவரும்—

ஆனைப்பந்தி பிரதான வீதியில் இடம்பெற்ற விபத்தில் நல்லூரைச் சேர்ந்த சிவஞானசுந்தர ஐயர் தர்சினி (வயது 18) என்பவரும்—

நாவற்குழியில் இடம்பெற்ற விபத்தில் அருள் சத்தியராஜ் (வயது 5) என்பவரும் காயமடைந்து யாழ். போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டனர். (15)

# சிங்கப்பூருக்கு பணிப்பெண் தேவை

சிங்கப்பூரில், சமையல் மற்றும் எல்லா வீட்டு வேலைகளும் செய்ய அனுபவம் உள்ள பெண் தேவை. பள்ளிக்கூடப் படிப்பு பற்றிய ஆதாரங்களும், அடையாள அட்டையும் கொண்டு உடன் நேரில் வரவும்.

S. K. குலசேகரம்.
(ஓய்வுபெற்ற அரசாங்க ஊழியர்),
டச் றோட் மீசாலை,
(விக்னேஸ்வரா பாடசாலைக்கு முன் வீடு).
(29401)

உ

சாவகச்சேரி

# அருள்மிகு ஸ்ரீதுர்க்காதேவி தேவஸ்தானம்

## மாசிமக இலட்சார்ச்சனை விழா

கிரியாகால விவரம்

மாசி மாதம் 3 ஆம் நாள் (15 — 02 — 1994) செவ்வாய் காலை 8-00 மணிக்கு

கணபதி ஹோமம்,
மாலை ஸ்ரீ துர்க்கா ஹோமம்

மாசி மாதம் 4 ஆம் நாள் (16 — 02 — 1994) புதன் முதல் மாசி மாதம் 13 ஆம் நாள் (25 — 02 — 1994) வெள்ளி வரை தினமும் காலை 7 மணிக்கும் மாலை 4 மணிக்கும்

பஞ்சவிம்சதி (25) கலச சங்காபிஷேகம்,
நியாச பூஜை இலட்சார்ச்சனை.
வேதபாராயணம், தேவார பாராயணம்.

மாசி மாதம் 13 ஆம் நாள் (25 — 02 — 1994) வெள்ளி மாசி மக தினத்தை முன்னிட்டு காலை

அஷ்டோத்தரசத சங்காபிஷேகம்.
இலட்சார்ச்சனை;- மாலை ஸ்ரீ சக்கர பூஜை.
இலட்சார்ச்சனை பூர்த்தி உற்சவம்.

இவ்வண்ணம் அம்பிகை அருள்வழி நிற்கும்;
பிரம்மஸ்ரீ ப. மஹாகணபதி சர்மா,
(தர்மகர்த்தா)

தாளையம்பதி வீதி,
நுணாவில் மேற்கு-
சாவகச்சேரி. (29354)

# யாழ். பல்கலைக்கழக கத்தோலிக்க மாணவர் ஒன்றிய நிதிக்காக

## திருமறைக் கலா மன்றத்தின் இசைக் கலைஞர்கள்

இணைந்து வழங்கும்

## தேனிசை மழை

நாள்: இன்று (12 — 02 — 1994) சனி
நேரம்: மு. ப 10 - 00 மணி (காலை)
பி. ப 3 - 00 மணி (மாலை)
இடம்: கைலாசபதி கலையரங்கம்

சென்ற 5 ஆம் திகதி என அறிவிக்கப்பட்ட இந் நிகழ்வு இன்று 12 — 02 — 1994 இடம்பெறுகிறது.

அன்பளிப்பு: 100/- 50/- 20/-

★ அந்தந்த வேளைக்குரிய டிக்கெட்டுகளுடன் வருபவர்களே அனுமதிக்கப்படுவர்.

விளம்பர அன்பளிப்பு:



S·M·FERNANDO

(இ-7325)

# பாடசாலைகளில்

தென்மராட்சிக் கல்விக் கோட்டப் பாடசாலைகளைச் சேர்ந்த 15 வயதுக்குட்பட்ட மாணவர்களுக்கு இடையிலான மென்பந்து கிரிக்கெட் போட்டிகள் இன்று காலை 8.30 மணிக்கு சாவகச்சேரி இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெறும். (த-31)

★ ★ ★

வட்டுக்கோட்டை திருஞானசம்பந்த வித்தியாசாலையின் இல்ல மெய் வல்லுநர் போட்டி நாளை ஞாயிறு பிற்பகல் 3 மணிக்கு பாடசாலை மைதானத்தில் அதிபர் திரு. வி. சிவஞானபோதம் தலைமையில் நடைபெறும். (க-161)

# மல்லாகத்தில் சேவை நலம் பாராட்டு விழா

யாழ்ப்பாணம், பெப். 12 மல்லாகம் கிராம அபிவிருத்தி சங்கத்தின் நாற்பதாண்டு மலர் வெளியீடும்—

திரு நம. சிவப்பிரகாசம், திரு. சு. ஸ்ரீபாஸ்கரன் ஆகியோரின் சேவை நலம் பாராட்டுதலும் — நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு மல்லாகம் மகா வித்தியாலய மண்டபத்தில் நடைபெறும்.

சங்கப் போஷகர் திரு. இ. கதிர்காமலிங்கம் தலைமையில் நடைபெறும் இவ்விழாவில் பல பெரியார்களும், அறிஞர்களும் ஆசியுரை, பாராட்டுரை வாழ்த்துரை ஆகியவற்றை நிகழ்த்துவார்கள். (க)

# விளையாட்டு நிகழ்வு

யாழ். மாவட்ட விளையாட்டு அபிவிருத்திக் குழுவினால் நடத்தப்படும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியின் மூன்றாம் இடத்துக்கான ஆட்டம் இன்று சனிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு யாழ். பல்கலைக்கழக மருத்துவபீட மைதானத்தில் நடைபெறும்.

இன்றைய ஆட்டத்தில் அளவெட்டி விநாயகர் வி. க அணியை எதிர்த்து குருநகர் பாடும்மீன் வி. க அணி மோதும். (த)

# கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், பெப் 12 யாழ் மாவட்டத்தில் உள்ள அனைத்து வர்த்தகர் சங்கங்களின் நிர்வாகசபை உறுப்பினர்களுக்குமான கலந்துரையாடல் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு யாழ் மாவட்ட அரசியல் துறைப் பணிமனையில் நடைபெறும். (த)

# தீர்த்தோற்சவம்

யாழ்ப்பாணம், பெப். 12 ஏழாலை தெற்கு வசந்தபுரம் வசந்த நாகபூஷணி அம்பாள் ஆலய வருடாந்த தீர்த்தோற்சவம் இன்று சனிக்கிழமை நடைபெறுகிறது. நேற்று இடம்பெற்ற தேர்த் திருவிழாவில் ஏராளமான அடியார்கள் பங்குபற்றி அம்பாளின் அநுக்கிரகத்தைப் பெற்றுக்கொண்டனர். (அ)

இங்கிருந்து ·
(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)
தால் நாடு பிரிவதற்கான ஒரு புறநிலையை தமிழர்கள் உருவாக்குவார்கள். இதை அரசிடம் தெரிவிக்குமாறு கிறிஸ்தவ குழுக்களிடம் தெரிவித்துள்ளோம்.

பொருளாதாரத் தடை நீக்கப்பட்டால் எம்மிடம் உள்ள போர்க்கைதிகளை விடுதலை செய்வோம்— இவ்வாறு திரு. பாலசிங்கம் தெரிவித்தார். (உ-3-9)

பூநகரி...
(1ஆம் பக்கத் தொடர்ச்சி)
நிகழ்ச்சிகள் ஆரம்பமாகின. பெருந்திரளான மக்கள் இதில் கலந்து கொண்டனர்.

இதேவேளை —

இத்தாக்குதலில் வீரச்சாவடைந்த மாவீரர்களின் உருவப்படங்களைத் தாங்கிய ஊர்தி வற்றாப்பளைச் சந்தியில் மக்களின் அஞ்சலிக்காக வைக்கப்பட்டது. (த)

மல்லாகம்---
(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)
இருந்து நேற்று முன் தினம் இரவும் அளவெட்டி, மல்லாகம் பகுதிகளை நோக்கி ஷெல் தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டன.

இரவு 7 மணியில் இருந்து 11 மணிவரை சுமார் 10க்கும் மேற்பட்ட ஷெல்கள் விட்டு விட்டு ஏவப்பட்டன. (இ-15-13)

# காணி விற்பனை

ஏழுதுமட்டுவாள்

அழகான வளமான நிலம், இரு பக்கம் அகண்ட நீரோடும் வாய்க்கால், மறுபக்கம் பிரதான வீதி, தென்னை நெல்லுக்கு மட்டுமல்ல, கால்நடை பண்ணைக்கும் உகந்தது. 200 இப்பில் இப்பில், 300 தென்னை, நிலப்பரப்பு முழுவதும் முந்தாமணக்கு மட்டுமல்ல; மிகப் பெரிய கால்நடைப் பண்ணைக்கும், ஆமணக்கு எண்ணைத் தொழிற்சாலைக்கும் திட்டமிடப்பட்ட நிலம். எட்டு முழ ஆழத்தில் வற்றாத நீரூற்று. வருடத்தில் ஆறு மாதத்திற்கு மேல் வாய்க்காலில் இருந்து நீர்ப்பாய்ச்சல், மின்சாரம் வழங்க ஏற்கனவே திட்டமிடப்பட்ட பகுதி எதிர் காலத்தில் இந்த நிலத்தின் பெறுமதி பல மடங்கு.

மொத்த நிலப்பரப்பு: 156
தொடர்பு: 14 — 02 — 94 தொடக்கம்
24 — 02 — 94 வரை
காலை 8-00 — 9-00 மணி வரை

சின்னையா சிவஞானம்
[நாகம்ஸ் சினிமா முன்]
முத்துக்கிருஷ்ணர் வீதி,
சுன்னாகம்
[சி-2064]

# மரண அறிவித்தல்

## திருமதி இராஜேஸ்வரி செல்லத்துரை

கோண்டாவில் மேற்கைச் சேர்ந்த திருமதி இராஜேஸ்வரி செல்லத்துரை (ஆசிரியர், கோண்டாவில் இந்து ம. வி) காலமானார்.

அன்னார் செல்லத்துரையின் (இளைப்பாறிய ஆசிரியர்) அன்பு மனைவியும், சிவக்கொழுந்து தம்பதிகளின் மகளும், செல்வரஞ்சன் (ஜேர்மனி), சுதாகரன் (பௌதீக விஞ்ஞான பீட 2 ஆம் வருட மாணவன்), சுதர்சன் (மானிப்பாய் இந்து. A/L 93 மாணவன்) ஆகியோரின் தாயாருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் கோண்டாவில் மேற்கு இல்லத்தில் ஞாயிற்றுக்கிழமை (13 - 2 - 94) முற்பகல் 11 மணிக்கு நடைபெற்று, பூதவுடல் தாவடி மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

தகவல்
செ. சுதாகரன்
(மகன்)
கலட்டி வீதி,
கோண்டாவில் மேற்கு. (29408)

## ஆறுமுகம் கந்தையா

இணுவில் மேற்கு ஆறுமுகம் கந்தையா 11-02-94 இல் சிவபதம் எய்தினார்.

அன்னார் பரமானந்தவல்லி அம்மன் கோவில் அறங்காவலரும், பூசகரும்,சுன்னாகம் பலநோக்குக் கூட்டுறவுச் சங்க இணுவில் மேற்கு கிளை 13 கிளைக்குழுத் தலைவரும், சமூகத் தொண்டரும் ஆவார்.

இவர் காலஞ்சென்ற ஆறுமுகம் - சின்னக்குட்டி தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்ற பாக்கியத்தின் அன்புக் கணவரும், புனிதவதி, விவேகானந்தன் (லண்டன்) ஆகியோரின் அருமைத் தந்தையும், வைத்திய கலாநிதி குமரகுருநாதன் (மஸ்கெலியா), திருமதி ரேணுகா விவேகானந்தன் ஆகியோரின் அன்பு மாமனாரும், கு. சந்திரகுமார் (யாழ். மருத்துவபீடம் 10ஆம் அணி), கு. தனவந்தி (யாழ். மருத்துவபீடம் 11ஆம் அணி), கு. செல்வந்தி (விஞ்ஞானபீடம் 2ஆம் வருடம்), வி. கௌசிகா, வி. நிசாஹரன், வி ஹரிகரன் ஆகியோரின் அருமைத் தாத்தாவுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (12 02-94) சனிக்கிழமை முற்பகல் 10-30மணியளவில் அன்னாரின் இல்லம் 'பழமுதிர்ச் சோலை'யில் நடைபெற்று, பூதவுடல் காரைக்கால் மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள், அன்பு உள்ளங்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
வைத்தியகலாநிதி எஸ் கே நாதன்
'பழமுதிர்ச்சோலை',
கந்தசாமிகோயில் றோட்,
இணுவில் (29399)

## இராசா நாகேஸ்வரன்

(நாயன்மார்கட்டு மகேஸ்வரி வித்தியாசாலைப் பிரதி அதிபர், கட்டப்பிராய் முத்துமாரி அம்மன் தேவஸ்தான அறங்காவற்குழுவின் செயலாளர்)

நாயன்மார்கட்டைப் பிறப்பிடமாகக் கொண்டவரும் கட்டப்பிராயை வசிப்பிடமாகக் கொண்டவருமாகிய இராசா நாகேஸ்வரன் அவர்கள் 11 - 02 - 94 (வெள்ளிக்கிழமை) பிற்பகல் காலமானார்.

அன்னார் ஜானகியின் அன்புக் கணவரும் ஜனனியின் (திருக்குடும்பக் கன்னியர்மடம் ம. வித்தியாலய ஆண்டு 8 மாணவி) அன்புத் தந்தையும், இராசா, மகேஸ்வரியின் அன்பு மகனும் காலஞ்சென்ற நல்லையா, சத்தியவதி (கனடா) ஆகியோரின் அன்பு மருமகனும், நாகேஸ்வரி, கௌசலை, அரசகுலசூரியன் (ஆசிரியர் க. க. மகா வித்தியாலயம்), இராமலிங்கம் ஆகியோரின் அன்புச் சகோதரனும், தபேந்திரன், சோமஸ்கந்தன், மதன்மோகன், வசந்தி, அமிர்தகுணநாயகி, ஜெயபாலன் (கனடா), ஜெயச்சந்திரன் (சுவிஸ்), ஜெயந்திரன் (கனடா) ஆகியோரின் அன்பு மைத்துனருமாவார்.

அன்னாரது இறுதிக் கிரியைகள், கட்டப்பிராய் கலைமணி வீதியில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனத்திற்கு நண்பகல் 12 00 மணியளவில் செம்மணி மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்களுக்கு அறியத்தருகிறோம்.

தகவல்:
திருமதி ஜானகி
(மனைவி)
கலைமணி வீதி,
கட்டப்பிராய். (29407)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 293/2 இலக்கத்திலுள்ள அச்சகத்தில் 12-02-1994 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org